முருகப்பெருமான் துணை

**மகான் முத்தானந்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.06.2022, சனிக்கிழமை

1. அருளோடு பொருள் பலம் பெற
அகிலத்தில் மக்களை நோக்கி
அருளுகின்ற மாதவ ராஜனே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது விடை திங்கள்
குறைவிலாமூவேழு திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 21 ம் நாள், 04.06.2022 சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு முத்தானந்தர் யானும்
3. யானும் உலகோர் உயர்வுற உரைப்பேன்
உயர்வழி அரங்கமகான் வழி
ஞானமாக ஏற்க வேண்டி
நம்பிக்கையூட்டி அருளுகின்ற
4. அருளுகின்ற சன்மார்க்கமெனும்
அறநெறிதனை ஏற்று நன்கு
வரமென உலகோர் தொடர
வசமாகும் ஞான வாழ்வு
5. வாழ்வினில் நல்லொழுக்கமும்
வளரும் வகையான அறிவும்
தாழ்விலா சேவை நோக்கும்
தனிப்பெருங் கருணைவடிவான
6. ஆனதொரு மாற்றம் கண்டும்
அறிவிப்பேன் கலியுக மக்கள்
ஞானவான் எனும் அடையாளம்
ஞாலமதில் உலகோர் கண்டு
7. கண்டுமே தொடர்ந்து வர
கலியின் செயல்பாடுகளை
உண்டாக வளரா தடுத்து
உயர் ஞான யுகமாற்றமாக
8. ஆகவே அற்புதம் படைத்து
அகிலத்தார் அனைத்து பேரும்
மகான் அரங்கன் வழி தேற்றம்
மண்ணுலகில் கண்டு ஞானி ஆவர்
9. ஆகவே ஞான யுகமாற்றம்
ஆற்றல் மிக்க ஞானிகள் ஆட்சி
மிகைபட காலம் கனிந்து
முருகப்பெருமான் தலைமை ஏற்ற

10. ஏற்றநல் முழுமை கொண்ட
ஏழாம் படை வீட்டின் சக்தியாக
ஆற்றல் கூடி ஞான ஆட்சி
அகிலம் கண்டு அமைதிபெறும்

11. அமைதியும் பாதுகாப்பும் மிக்க
ஆளுமையாக கலிவாழ் மக்கள்
நேமமுடன் கண்டு மகிழ்வர்
நிகழ்த்திய அருளாசி முற்றே

–சுபம்–